30th October 1962]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No. Sir. There is no proposal to open new branches.

பிச்சைக்காரர்களுக்கான விடுதிகள்

* **947 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்கார விடுதிகள் எத்தனை ;

(இ) அதிலுள்ள பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் ;

(உ) பிச்சைக்காரர் ஒழிப்பு முயற்சிகள் எந்த அளவு வெற்றி பெற நிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) பதினான்கு.

(இ) ஆயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு.

(உ) பிச்சையெடுப்பதை தடுப்பதற்கான எல்லா முயற்சிகளும் கூடுமான வரையில் அரசினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சியில் வெற்றி காண்பது பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கிறது.

திரு. இரா. நாராயணன் : பஸ் ஸ்டாண்டுகளிலும், மற்றும் அனேக இடங்களிலும் பிச்சைக்காரர்கள் தொந்தரவு அதிகமாக இருக்கின்றன. அதைச் சர்க்கார் கவனித்து, அவர்களுடைய வாழ்க்கை வீணாகப்போவதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போதே 14 பிச்சைக்கார விடுதிகள் இருக்கின்றன. அத்துடன் Care Camp-களும் இருக்கின்றன. மேலும் விடுதிகள் அமைக்கவேண்டுமென்றால், நகர மன்றத்தினரும், பொது மக்களும் மேலும் அக்கறை எடுத்துக்கொண்டால், இன்னும் அதிகப்படியான விடுதிகளை அமைத்து பிச்சைக்காரர்களுடைய தொல்லையை நீக்கி விடலாம்.

ஆரம்ப விடுதிகள்

* **948 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிரைமரி ஹெல்த் சென்டர்களில், வெளியில் கிராமங்களில் சுற்றிப் பார்க்க ஒரு டாக்டரும், ஹெல்த் சென்டரில் ஒரு டாக்டருமாக இரண்டு டாக்டர்களை நியமிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No Sir.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு ப்ரைமரி ஹெல்த் ஸென்டரின் கீழ் மூன்று ஸப்-சென்டர்கள் இருக்கின்றன. ப்ரைமரி ஹெல்த் சென்டரைச் சேர்ந்த டாக்டர் மூன்று நாட்களுக்கு வெளியே சென்றுவிடுகிறார். இதனால் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் மூன்று நாட்களுக்கு எந்தவிதமான மருந்தும் கொடுக்கமுடியாமலிருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, அங்கே ஒரு டாக்டர் எல்லா நாட்களும் இருந்து மருந்துகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூன்று நாட்கள் டாக்டர் வெளியிலே போவது இல்லை. ஏதாவது ஸ்பெஸிபிக் இன்ஸ்டன்ஸ் இருந்து கனம் அங்கத்தினர் குறிப்பிட்டுச் சொன்னால், அதைக் கவனிக்கலாம். இரண்டு டாக்டர்களைத் தற்சமயம் போட முடியாது.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு ஹெல்த் ஸென்டரின் கீழ் மூன்று ஸப் சென்டர்கள் இருப்பதால், அந்த மூன்று இடங்களுக்கும் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டர் தான் போகவேண்டியிருக்கிறது. அதனால், ஹெல்த் சென்டரில் மருந்து கொடுக்க வசதிகள் ஏற்படுவதில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

(பதில் இல்லை).

[30th October 1962

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்கும் மூன்று ஸப்-ஸெண்டர்கள் இருக்கின்றன. அந்த மூன்று ஸப்-ஸெண்டர்களிலே டாக்டர் சென்று பார்வையிட்டுவிட்டு, அன்றைக்கே ப்ரைமரி ஸெண்டருக்குத் திரும்பி வந்துவிடுகிறார். ஆகையால், டாக்டர் ப்ரைமரி ஸெண்டரிலேயே தான் தங்குகிறார் என்பதைக் கனம் அங்கத்தினர் கவனிக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கரு. சீமைச்சாமி : நான் அதைத் தெரியாமல் சொல்லவில்லை. தெரிந்தே தான் சொல்கிறேன். ஸப்-ஸெண்டர்களுக்குச் சென்றுவிட்டு, டாக்டர் சாயங்காலத்திற்குள் திரும்பிவிடுகிறார் என்றாலும், ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்குப் பகலில் வருகிறவர்களுக்கு மருந்துகள் கொடுக்க முடிவதில்லை என்பதுதான் பிரச்னை.

கனம் சபாநாயகர் : டாக்டர் வருவதையும் போவதையும் கனம் அங்கத்தினர் பார்த்துக்கொண்டிருக்கிறாரா என்ன ?

Pre-elementary schools

* 949 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open Pre-Elementary Schools; and

(*b*) if so, the number proposed for Salem district in 1962–63?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) Forty-eight pre-school centres.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையின் சுற்றுப்புறம் (சுகாதாரம்)

950. கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையார் கரும்பு சக்கையினை உலைக் கூடத்திற்குப் பயன்படுத்துவதால் சுற்றுப்புறவாசிகளின் சுகாதாரம் பாதிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால், அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) A representation has been received from the Nellikuppam Panchayat.

(இ) The matter is under examination.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் ஆலைக்கு வந்து, இந்த குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிற சமயத்தில் மட்டும் சீர் திருத்தம் செய்துவிட்டு, மற்ற நாட்களில் சும்மா இருந்துவிடுகிறார்கள். ஆகவே, மற்ற நாட்களில் இந்தத் தொந்தரவுகள் இருப்பதால், அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, நிரந்தரமான வகையில் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு நன்மை தேடித்தரக்கூடிய வகையில், ஃபாக்டரியில் கரும்புச் சக்கைகளை உலைக்கூடத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே, இது பரிசீலனையில் இருக்கும் காரணத்தால், கனம் அங்கத்தினர் சொல்வதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.